இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை 1.50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 383 ★ 1988 மே 13 வெள்ளிக்கிழமை

அடுத்த இதழ் முதல் 12 பக்க 'கம்கறு மாவத்த'



'கம்கறு மாவத்த' பத்திரிகை ஜூன் மாதத்தில் வெளிவரும் முதல் இதழ் 12 பக்கங்களை கொண்டதாக பிரசுரமாகும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழுவானது தொழிலாள வர்க்கத்திடம் மகிழ்வுடன் தெரிவிக்கின்றது. தமிழில் பிரசுரமாகும் 'தொழிலாளர் பாதை' பத்திரிகை சில மாதங்களில் 12 பக்கங்கள் கொண்டு பிரசுரமாக உள்ளது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் தலைவர் ஒருவராயும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் விளங்கிய மறைந்த தோழர். கீர்த்தி பாலசூரியவின் பெயரில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை அபிவிருத்தி செய்யும் 2,50,000 ரூபா கொண்ட நிதி திரட்டப்படுகையில்; தொழிலாள வர்க்கத்திடமும் ஏனைய ஒடுக்கப்பட்டவர்களிடமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு வழங்கிய ஓர் உறுதி மொழி இங்ஙனம் நிறைவேற்றப் படுகின்றது.

பக்கங்களை இங்ஙனம் அதிகரிப்பது, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இலங்கைக்குள் கட்டியெழுப்பும் போராட்டத்தின் பெரும் உயர்மட்ட அளவிலான தீர்மானமாகும். இவ்வாண்டில் தோழர். லியொன் ட்ரொட்ஸ்கி நான்காம் அகிலத்தினை ஆரம்பித்து 50 ஆண்டுகளும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அனைத்துலகக் குழுவின் கிளையாக நிறுவப்பட்டு 20 ஆண்டுகளும் பூர்த்தியுறுகின்றன. எமது அனைத்துலக இயக்கத்தின் 50 ம் ஆண்டிற்குள், நாம் உலக ஏகாதிபத்தியம் மீண்டும் பாரிய அளவில் நெருக்கடிக்குள் மூழ்கி முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் காலனித்துவ நாடுகளிலும் புரட்சிகர தொழிலாள வர்க்க எழுச்சிகளுக்கான சூழ்நிலையை உருவாக்கி உள்ள நிலைமையிலேயே காலடி எடுத்து வைத்துள்ளோம். எமது இயக்கத்தின் மூக்கிய பொறுப்பான தொழிலாள வர்க்க தலைமைத்துவத்தை தீர்க்கும் பொருட்டு முன்னெரு போதும் இல்லாதவாறு போராட்டம் ஒன்றால் நாம் முன் செல்ல வேண்டி உள்ளோம். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினை தொலைத்து கட்ட முயன்ற பிரித்தானியாவின் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்த விட்டோடிகள் கும்பலுக்கு எதிரான, வெற்றிகரமான போராட்டத்தினால்

★ 8 ம் பக்கம் பார்க்கவும்

# வட - கீழ் மாகாணங்களில் இந்திய இராணுவ ஒடுக்கு முறை உக்கிரம்

**கடந்த சில தினங்களாக இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வட மாகாணத்தில் இராணுவ தாக்குதல்களை மீண்டும் உக்கிரம் ஆக்கியுள்ளது. இந்திய இராணுவ தாக்குதலினால் அநேகர் கொல்லப்பட்டு உள்ளதோடு தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை நடவடிக்கைகள் சில பிரதேசங்களில் அடியோடு ஸ்தம்பித்துப் போயுள்ளது.**

இஸ்ரேலின் உள்ளும் இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட மேற்குக் கரைப் பகுதியிலும் பாலஸ்தீன மக்களை நசுக்கும் பொருட்டு சியோனிஸ்டுகள் கையாளும் மிலேச்ச ஒடுக்குமுறை விதிமுறைகளை இந்தியப் படைகளும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கையாண்டு வருகின்றனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அங்கத்தினர்களையும், ஆயுதங்களையும் தேடுவதாக கூறிக் கொண்டு வடமராட்சிப் பகுதியில் நாகர் கோவில், செம்பியன் பற்று, மருதன் கேனி தாழையடி, சுண்டிக்குளம் முதலியனவற்றை முற்றுகையிட்ட இந்தியப் படைகள் சித்திரவதை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஏப்ரல் 30 ம் திகதி இப்பிரதேசங்களில் அமுழுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் எந்தவொரு கணத்திலும் நீக்கப்படாமல் — 10 நாட்கள் தொடர்ச்சியாக அமுலில் இருந்து வந்தது. உணவுத் தட்டுப்பாட்டால் கிராமவாசிகள் அளப்பரிய சிரமங்களுக்காளாகினர்.

இப்பிரதேசங்களில் தற்சமயம் வசிப்போர் ஏழை மீனவர்களே. இம் மீனவர்கள் மீன் பிடித்தோ அல்லது அன்றன்றுடைய நடவடிக்கைக்கோ கிராமங்களை விட்டு வெளியேறாத நிலை ஏற்பட்டுள்ளது. கடைகள், பாடசாலைகள் அலுவலகங்கள் அனைத்தும் அடைத்து மூடப்பட்டுள்ளன ஊரடங்குச் சட்டம் காரணமாக் தமது உத்தியோக கடமைகளின் பொருட்டு வீடுகளில் இருந்து புறப்பட்டோர் வீடு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையின் கீழ் இந்தியப் படைகள் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

★ 2 ம் பக்கம் பார்க்கவும்



புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மேதின ஊர்வலம்

**வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபு ஜிகாத் படுகொலையை கண்டனம் செய்!

## (புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவின் அறிக்கை)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவரான அபு ஜிகாத் சியோனிச கொலைகார கும்பலால் படுகொலை செய்யப்பட்டதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கண்டனம் செய்கின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினரான நாம் அவரது குடும்ப அங்கத்தவருக்கும் பீ. எல். ஓ. வின் அவரது தோழருக்கும் எமது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றோம். அமெரிக்க ஏகதிபத்தியத்தின் ஆதரவை பெற்ற இந்த குழப்பகரமான கொலையின் ஊடாக பலஸ்தீன மக்கள் சுயநிர்ணய உரிமைக்கான தமது போராட்டத்தின் மிக திடமான போராளி ஒருவரை இழந்துவிட்டனர். பீ. எல். ஓ. வினது பிரதான அமைப்பான அல்பாடாவின்ப்பின் அமைப்பாளராயும் இராணுவ கட்டளையிடும் அதிகாரியாகவும் செயற்பட்டு தனது முழு வாழ்வையும் இப்போராட்டத்துடன் பிணைத்திருந்தார்.

இந்த மிலேச்ச கொலையானது மீண்டும் ஒரு முறை கொலையாளிகளும் பயங்கரவாதத்தை பகிரங்கமாக ஆதரிக்கும் சியோனிஸ்டுகளும் மத்திய கிழக்கின் முக்கிய பயங்கரவாதிகளும் பவசா அபு ஜிகாத்தை கொலை செய்யும், தீர்மானத்தை இஸ்ரேலிய உள்நாட்டு மந்திரி சபை வாக்கெடுப்பின் ஊடாகவே முடிவெடுத்திருந்தனர்.

சியோனிஸ்டுகள் இக்கொலைக்காக பலஸ்தீனத்துள் தொழிலாளர், இளைஞர்கள் எழுச்சியுற்றதற்கு எதிர்வினையாகவே அணி திரண்டுள்ளனர். கொலைகளும் வெளியேற்றுவதும் சுடுவதையும் கவனியாது மாதக் கணக்கில் இப்புரட்சிகர எழுச்சி அபிவிருத்தியுற்றது. அபு ஜிகாத் கொலை சியோனிசத்தின் பலத்தை அல்ல அதன் நெருக்கடியின் குளறுப் படியையும் பலஸ்தீன எதிர்ப்பினை அடக்க இயலாக்கையாலாத் தன்மை யயும் வெளிப்படுத்துகின்றது. கொலையின் விளைவாக இந்த எதிர்ப்பு மேலும் அபிவிருத்தியுற்றுள்ளது. இடையறுது சுடும் சியோனிச படைகளுக்கு எதிராக பலஸ்தீனத்துள் பாரிய போராட்டம் இதன் பின் அபிவிருத்தியுறுகின்றது.

இக்கொலையானது 30 க்கு மேற்பட்ட மொசாட் இராணுவ கொலைப் பிரிவினால் நடத்தப்பட்டு உள்ளது. 70 — 100 க்கு இடைப்பட்ட குண்டுகள் வரை அவரை தாக்கி உள்ளதுடன் கொலை கும்பலின் பெண் ஒருத்தி முழு சம்பவத்தையும் திரைப்படம் எடுத்துள்ளார். இஸ்ரேலிய விமானத்தினூடாக டியூனிசியாவின் ரேடியோ டெலிபோன் தற்காலிகமாக செயலற்று இருக்குமாறு செய்யப்பட்டது. பிரபல பயங்கரவாதிகளான யிஸ்டாக் ஷமீர் கொலைபடை திருப்பிச் செல்ல முன் மிக விமரிசையாக அவர்களுக்கு வரவேற்பளித்துள்ளான்.

இஸ்ரேயலைப் போல சகல ஏகாதிபத்திய பெருங் கைகளும் பலஸ்தீன மக்களின் எழுச்சியின் வீரத்தையும் திடசங்கற்பத்தையிட்டு பெரும் பயம் கொண்டுள்ளது. அது இஸ்ரேல் மட்டுமன்றி சகல முதலாளித்துவ அராபிய நாடுகளின் எழுச்சிக்கு வழிகோலி ஏகாதிபத்தியத்தை களையெடுக்கும் என்பதால் ஆகும்.

இத்தகைய கொலைக் குழுவில் தங்கியிருப்பது, ஆழமாகும் ஏகாதிபத்திய நெருக்கடிக்கும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர எழுச்சி அனைத்துலக ரீதியில் வெடித்தெழுவதற்கும் எதிராக ஏகாதிபத்தியம் செய்யும் தயாரிப்பாகும். சகல முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் பயங்கரவாதத்திற்கு எதிராக வார்த்தை அளவில் அறிக்கையிட்டு விட்டு இத்தகைய கொலைக் கும்பலையும் தயார் நிலையில் வைத்த வண்ணம் உள்ளன.

அபு ஜிகாத் பாலஸ்தீன தேசிய இயக்கத்தின் சிறந்த பிரதிநிதியாக விளங்கினார். கலீல் அல்வஷீர் என்ற பெயரில் பாலஸ்தீனத்துள் பிறந்த அவர் அடக்குமுறை யுத்தம் நாடு கடத்தல் என்பவற்றின் ஊடாக அபிவிருத்தியுற்று வந்த பரம்பரை ஒன்றின் பிரதிநிதியானார். 1948 ல் தனது தாயகத்தினை கைவிட்டோட நேர்ந்த அவர் 50 ம் ஆண்டு காலத்தில் நசாரின் அராபிய தேசிய வாதத்தினதும் அல்ஜீரிய தேசிய விடுதலை யுத்தத்தினதும் ஆசிகளை பெற்றார். அராபிய முதலாளித்துவ வர்க்கத்தின் காட்டிக் கொடுப்பிற்கு எதிராகிய அவர் 1954 ல் பாலஸ்தீன விடுதலையின் பொருட்டு ஆயுதம் தாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டமையால் எகிப்திய படைகளால் கைது செய்யப்பட்டார். 1956 ல் யசீர் அராபாத், அபு ஜிகாத்துடன் இணைந்து அல்பதா இயக்கத்தை ஆரம்பித்தார். 60 ம் ஆண்டுக் காலங்களில் இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை அரம்பித்ததும் அவரே. அதற்கு பாலஸ்தீன மக்களது ஏகோபித்த ஆதரவு கிடைத்ததை தொடர்ந்து அதற்கு எதிராக சதி செய்த அராபிய முதலாளித்துவ வர்க்கம் அவரை ஜோர்டானுக்கும் பின்னர் லெபனானுக்கும் நாடு கடத்தியது.

அவர் சோசலிஸ்டோ அல்லது கம்யூனிஸ்டோ அன்று: பாலஸ்தீன தேசியவாதியே ஆவர். சுதந்திர பாலஸ்தீன அரசினை உருவாக்குவது அவரின் இலக்காக விளங்கியது. அவரது முதலாளித்துவ வேலைத்திட்டத்தில் குறைபாடுகள் இருந்த போதிலும் அவர் ஆயுத போராட்டத்திற்கு மக்களை அணி திரட்டவும் பீ. எல். ஓ. விற்குள் மிகவும் ஜனநாயக ரீதியிலான தொடர்புகளை வைத்திருக்கவும் செயற்பட்டார்.

இக்கொலை சம்பந்தமான அரசியல் பொறுப்பு ஏற்க வேண்டிய மற்றுமோர் எதிர்ப்புரட்சிகர ஏஜன்ட் அனைத்துலக ஸ்டாலினிசமாகும். 1947 ல் இஸ்ரேல் நிறுப்படுவதற்கு சார்பாக இருந்த ருஷ்ய அதிகாரத்துவத்தின் இன்றைய தலைவரான மிகையில் கொர்பச்சேவ் இக்கொலைக்கு சில தினங்களுக்கு முன் இஸ்ரேலை அங்கிகரிக்கும் படி யசீர் அரபாத்தை நிர்ப்பந்தித்தார். இஸ்ரேலுக்கு சார்பாக சோவியத் அதிகாரத்துவம் எடுத்த நிலைப்பாடு சியோனிஸ்டுகளது படுகொலைக் கொள்கையை அபிவிருத்தி செய்தது.

மார்க்கிசம், இஸ்ரேலிய அரசுக்கும் சியோனிசத்திற்கும் எந்தவித ஆதரவையும் வழங்காது. இஸ்ரேல் நிறுவப்பட்டதற்கும் யூத மக்களின் சுயநிர்ணயத்திற்கும் எந்தவித தொடர்புமே கிடையாது. பாலஸ்தீன மக்களை விரட்டி அவர்களை இரண்டாம் தரக் குடிகளாக ஆக்கியே இஸ்ரேல் நிறுவப்பட்டது. சியோனிச அரசு இந்த அடிப்படையில் அமைந்து மத்திய கிழக்கில் ஏகாதிபத்திய யுத்த முகாம் ஒன்றை சிருஷ்டித்தது.

லியொன் ட்ரொட்ஸ்கி சியோனிசத்தை பற்றி அனைத்துலக தொழிலாள வர்க்கத்திற்கு தெளிவான எச்சரிக்கை விடுத்தார். யூதர் எதிர்ப்புக்கும் பாசிசத்துக்கும் எதிரான பதில், அராபிய நிலங்களை கைப்பற்றுவதே எனக் கூறி சியோனிசம் யூதர்களுக்கு மரண பொறிக் கிடங்கை தோண்டுவதாக ட்ரொட்ஸ்கி எச்சரித்தார். 1948 ல் இஸ்ரேல் நிறுவப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன், நான்காம் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் பின்வருமாறு தெரிவித்தது. ''யூதர் பிரச்சினைக்கான சியோனிச தீர்வினை மிக அறியாமையானதும் பிற்போக்கானதென நான்காம் அகிலம் கண்டிக்கின்றது; சியோனிசத்தை முற்றாக நிராகரிப்பது யூத தொழிலாளரது போராட்டம் அராபிய ஏழைகளது சமூக, தேசிய, விடுதலை போராட்டத்துடன் இணைப்பதற்கான முன் நிபந்தனையாகும் என அது பிரகடனம் செய்கின்றது.

இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள், அவர்களது அனைத்துலக எசமானர்களுக்கு ஏற்ப சென்று இஸ்ரேலிய அரசின் நீடிப்பினை அங்கீகரித்துள்ளனர்.

பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவு, உண்மையில் இலங்கைக்குள் ஏகாதிபத்தியத்தின் முக்கிய பாதுகாப்பாளரான முதலாளித்துவ அரசினையும் முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க ஆட்சியையும் தூக்கி வீசி ஆட்சியைக் கைப்பற்றுவதன் மூலமே கிடைக்கும். இதற்கு முதலாளித்துவ அரசின் பாதுகாப்பாளராகச் செயற்படும் சமசமாஜ, ஸ்டாலினிச, இ. தொ. கா. தலைமைகளை தொழிலாள வர்க்க தலைமையில் இருந்து விரட்டியடிக்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சியாக கட்டியெழுப்புவது அவசியம்.

---

# வட — கீழ் மாகாணங்களில் . .

★ முன் பக்கத் தொடர்ச்சி

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கிடங்குகளை தேடிக் கண்டு பிடிக்கும் வரை ஊரடங்குச் சட்டத்தை அகற்றப் போவதில்லை என இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர். ஊரங்குச் சட்டத்தினால் மக்கள் சொல்லொணாத் துயரம் அடைவதால் அதனை அகற்றும் படி கேட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்களுக்கு ''புலிகளை எங்களிடம் ஒப்படையுங்கள் அப்பொழுது ஊரடங்குச் சட்டத்தை அகற்றுகின்றோம்' என படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நெல்லியடிப் பகுதியில் இந்தியப் படைகளும் 'திரீஸ்டார்' கைக்கூலிப் படைகளும் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து கரவெட்டி, நெல்லியடி, வதிரி பருத்தித்துறை, வல்வெட்டித்துறையை சுற்றி வளைத்த இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் பிராந்திய இளைஞர்களை கைது செய்து, குறுக்கு விசாரணை செய்து, 'சாட்டை' அடி கொடுத்துள்ளனர். வீதித் தடைகளை தாண்டி' செல்லும் சகல இளைஞர்களும் இந்த மோசமான 'சாட்டை' அடிக்கு இலக்காகியுள்ளனர்.

துணுக்காய் பகுதியில் இந்தியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் இரண்டு சைக்கிள் ஓட்டிகள் ஸ்தலத்திலேயே மரணமாகினர் யாழ்ப்பாணம் தொலைபேசி மத்திய நிலயத்தைச் சேர்ந்த ரீ. அம்பிகைராஜா சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இந்திய இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் அக்கரைப்பற்றினை சுற்றி வளைத்த இந்தியப் படைகள் விடுதலைப் புலிகள் இளைஞர்கள் எனச் சொல்லப்படும் சுக்கான், ராம்நாத் என்ற இரண்டு இளைஞர்களை சுட்டுக் கொன்றுள்ளது. மட்டக்களப்பு ஆரைப்பற்றினுள் ஆக்கிரமித்த இந்தியப் படைகள் விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தினர் இருவரைக் கொலை செய்தும், அநேக இளைஞர்களைக் கைது செய்தும் உள்ளது.

திருமலைப் பகுதியில் தோப்பூர் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன், மணி என்ற இரண்டு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டனர் இந்தியப் படைகள் மே முதல் வாரத்தில் மட்டும் விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தினர் எனச் சொல்லப்படும் 10 இளைஞர்கள் உட்பட 26 பேரை வட — கீழ் மாகாணங்களில் கைது செய்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் தினமும் இடம் பெறும் இந்த இராணுவ முற்றுகைகளின் போது தினமும் 10 வயது முதல் 50 வயது வரையிலான ஆண்கள் கைது செய்யப்படுகின்றனர். இவர்களை இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று கைகளைக் கட்டி பொல்லுகளால் தாக்கியுள்ளனர். இத்தாக்குதல்களுக்கு தமிழ் தெரியாத இந்தியப் படையினரே பயன்படுத்துகின்றனர்.

இதற்கிடையே மட்டக்களப்பு கரையோரப் புறமாக நங்கூரமிட்டுள்ள இந்திய

★ 8 ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடுழி வாழ்க!



1948 — 1987

## 'நான்காம் அகிலம்' சஞ்சிகையின் ஆசிரியத் தலையங்கம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் காலாண்டு தத்துவார்த்த சஞ்சிகையான 'நான்காம் அகிலத்தின்' புதிய இதழ் வெளிவந்துள்ளது: இந்த 1988 ஜனவரி — மார்ச் இதழ் பிளவின் பின்னர் வெளியாகும் ஆறுவது இதழாகும். தோழர். கீர்த்தி பாலசூரியவின் மரணம் பற்றிய இவ்விதழின் ஆசிரியத் தலையங்கம் இங்கு பிரசுரமாகின்றது.

**'நான்காம் அகிலம்' சஞ்சிகையின் ஆசிரியர் குழு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளர் தோழர். கீர்த்தி பாலசூரியவின் மறைவினுல் ஏற்பட்ட இழப்பினையிட்டு ஆழ்ந்த வருத்தத்துடன் அவரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துகின்றது.**

**1987** டிசம்பர் 18ம் திகதி காலை 39 வயதில் ஏற்பட்ட அவரின் திடீர் மரணம், யுத்தத்துக்கு பின்னைய காலப் பகுதியில் ட்ரொட்ஸ்கிச தின் தலைசிறந்த ஒரு பிரதிநிதியின் புரட்சிகர சேவைகள் நான்காம் அகிலத்துக்குக் கிடைப்பதை தடுத்து விட்டது.

16 வயதில் இருந்து தோழர்: கீர்த்தி பாலசூரிய தமது முழு வாழ்க்கையினையும் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியை கட்டி எழுப்புவதற்கு அர்ப்பணம் செய்தார். அவரின் 20 ஆவது பிறந்த தினத்துக்கு முன்னரே அவர் 1968 ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஸ்தாபிதத்தை தொடர்ந்து அதன் தலைவராக அவரின் தோழர்களால் தெரிவு செய்யப்பட்டார்.

அதைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் கீர்த்தி மார்க்சிசத்தின் தத்துவார்த்த அத்திவாரங்களை தாம் முழுமையாகவும், தெளிவாகவும் உள்ளீர்த்துக் கொண்டதை வெளிக்காட்டினர். ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு, லெனினின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய ஆக்கங்களின் கருத்துரையாளர் என்ற விதத்தில் அவருக்கு இணையே கிடையாது.

அவரின் அரசியல் பிரவேசம், அமெரிக்காவில் சோசலிசத் தொழிலாளர் கட்சினதும் இலங்கையில் லங்கா சமசமாஜக் கட்சியினதும் கூட்டு காட்டிக் கொடுப்புகளுடன் ஏககாலத்தில் இடம் பெற்றது. ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இச் சம்பவங்கள் — முன்னையது 1963 ல் அனைத்துலகக் குழுவில் இருந்து விலகியமையும் பின்னையது 1964 ல் ஒரு முதலாளித்துவ கூட்டரசாங்கத்தில் நுழைந்து கொண்டமையும் பப்லோவாதத் திரிபுவாதத்தின் எதிர்ப்புரட்சி பாத்திரத்தை அம்பலமாக்கின. இக்காட்டிக் கொடுப்புக்களின் படிப்பினைகளைப் பெற்றுக் கொண்ட தோழர் கீர்த்தி, சந்தர்ப்பவாதத்தின் உறுதியான எதிரியானார். இதனை அவர் தொழிலாள வர்க்கத்தின் உயிராபத்து எதிரியாக இனங் கண்டார்.

எனவே தான், அனைத்துலகக் குழுவின் பிரித்தானியப் பகுதியுள் பப்லோவாத திரிபுவாதத்தின் அறிகுறிகளை முதலில் அவர் தேடிக் கண்டமை தற்செயலானதல்ல. 1968 ம் ஆண்டிலேயே ஹோசிமின்னினதும், தேசிய விடுதலை முன்னணியினதும் அரசியலை மகோன்னதமாகக் காட்டி மைக்கேல் பண்டாவால் எழுதப்பட்ட 'நான்காம் அகிலத்தின்' ஆசிரியத் தலையங்கத்தின் பிரசுரத்திற்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எதிர்ப்புத் தெரிவித்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், 1971 டிசம்பரில் சோசலிஸ்ட் லேபர் லீக் (தொழிலாளர் புரட்சிக் கட்சியின் முன்னோடி) கிழக்கு பாகிஸ்தான் (பங்களாதேசின் நிர்மாணத்துக்கு முன்னைய இப் பிராந்தியப் பெயர்) மீதான இந்திய ஆக்கிரமிப்புக்கு வழங்கிய ஆதரவை எதிர்த்து விரிவான கண்டன அறிக்கைகளை வரைந்தார்.

இந்த எழுத்துக்கள் மூலம் இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தாம் நனவாக இறங்கியுள்ள திரிபுவாத வழிப்போக்கில் ஒரு போதும் உடன்பாடு காணமாட்டார்கள் என்பது எஸ், எல். எல் தலைமைக்கு புரிந்தது. இதனால் பண்டா, ஜெரி ஹீலி கிளிப் சுலோற்றர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை தனிமைப்படுத்தி அவமானப்படுத்தி அழிக்கும் நடவடி— மான ஒரு பிரச்சாரத்தினை ஆரம்பித்தனர்.

இம்முயற்சிகள், ஹீலி — சுலோற்றர் — பண்டா கும்பலுடனான அனைத்துலகக் குழுவின் 1985 — 86 பிளவின் பின்னர் பிரசுரமான 'நான்காம் அகிலத்தின்' வெளியீடுகளில் முழுமனே பத்திரங்களாக உள்ளடங்கியுள்ளன.

தோழர். கீர்த்தி, தமது வாழ்வின் இறுதி இரு ஆண்டுகளிலும் நான்கரம் அகிலத்தைக் கட்டி எழுப்ப மாபெரும் பங்காற்றி உள்ளார். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் நாலுவிதமான ஓடுகாலி கும்பல்களை தோற்கடிக்கவும், ஹீலி — பண்டா — சுலோற்றரினால் இடைவிடாது பரப்பப்பட்ட சந்தர்ப்பவாதத்தை அனைத்துலகக் குழுவில் இருந்து துடைத்துக் கட்டவும் கீர்த்தி போராடினார்.

ஒரு தசாப்தத்துக்கும் மேலாக அடிப்படைக் கொள்கை சம்பந்தமான அக்கறையை 'பிரச்சாரவாதம்' என தொழிலாளர் புரட்சிக் கட்சியின் துரோகிகள் தட்டிக் கழித்து வந்ததன் பின்னர், தோழர். கீர்த்தி வரலாற்று ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட மார்க்சிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில அனைத்துலகக் குழுவைக் கட்டி எழுப்ப திடசங்கற்பம் பூண்டார்.

அவர் மீண்டும் அனைத்துலகக் குழுவின் உள்ளே புரட்சிகர மார்க்சிசத்தின் சவால் செய்ய முடியாத ஆளுமையை நிலை நாட்ட திடசங்கற்பம் பூண்டார். கீர்த்தியைப் பொறுத்த வரையில் இது ஹீலி, பண்டா, சுலோற்றருக்கு எதிரான ஈவிரக்கமற்ற அரசியல் போராட்டத்தினையும், அவர்களின் நான்காம் அகிலத்தின் காட்டிக் கொடுப்பினை முறை முறையாக அம்பலப்படுத்துவதையும் வேண்டி நின்றது.

1985 அக்டோபரில் தோழர்: கீர்த்தி அனைத்துலகக் குழுவின் அவசர கூட்டமொன்றில் கலந்து கொள்ளும் பொருட்டு கொழும்பில் இருந்து லண்டனுக்குப் பயணமானர். ஹீலி ஆளுமையை அடியோடு துஷ்பிரயோகம் செய்ததாலும், தொழிலாளர் புரட்சிக் கட்சியின் முழுத் தலைமையினதும் தேசிய சந்தர்ப்பவாதத்தினுலும் தொழிலாளர் புரட்சிக் கட்சியினுள் வெடித்த நெருக்கடியைத் தொடர்ந்து இக்கூட்டம் கூட்டப்பட்டது.

அவர் லண்டனுக்கு வருகை தந்ததைத் தொடர்ந்து 'வேர்க்கஸ் லீக்' கின் அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைமைக்கு எதிராக 1982 ம் 1984 ம் ஆண்டுகளில் செய்த கண்டனங்களைப் பற்றி முதல் தடவையாக கேள்விப்பட்டார். உரிய பத்திரங்களைப் படித்ததன் பின்னர் கீர்த்தி உடனடியாக தமது உடன்பாட்டை பிரகடனம் செய்தார். தொழிலாளர் புரட்சிக் கட்சியில் இருந்து ஹீலியை விலக்குவதை அங்கீகரித்த அவர், தொழிலாளர் புரட்சிக் கட்சியின் நாற்றமெடுப்புக்கான கோட்பாட்டு, வேலைத்திட்ட வேர்களை பூரணமாக ஆராய வேண்டுமென வலியுறுத்தினர்.

இயக்கத்தின் முன்னெருபோதும் இல்லாத வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த

☛ 4ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடூழி

அரசியல் விவகாரங்கள் தொடர்பாக தொடர்ந்தும் ஆய்வுகள் இடம் பெறுவதைத் தடை செய்யும் பொருட்டு ஹீலியின் வெளியேற்றத்துக்கு பின்னர் சுலோற்றரும் பண்டாவும் நயவஞ்சகமான முறையில் முன்வைத்த 'புரட்சிகர ஒழுக்கம்' என்ற போலி பதாகையை கீர்த்தி நிராகரித்தார். தொழிலாளர் புரட்சிக் கட்சித் தலைமை திட்டவட்டமான முறையில் அடிப்படைக் கொள்கைகளைக் காட்டிக் கொடுத்துள்ளதாக அனைத்துலகக் குழுவின் இடைக்கால அறிக்கை பூரணப்படுத்திக் காட்டியதைத் தொடர்ந்து தோழர். கீர்த்தி தொழிலாளர் புரட்சிக் கட்சி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் இருந்து இடை நிறுத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாக வாக்களித்தார். கடந்த ஒரு தசாப்த காலமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வந்த கொள்கைகளுக்கு தாம் பொறுப்பல்ல என்ற சுலோற்றர், பண்டாவின் மோசடியான கோரிக்கைகளையும் அவர் நிராகரித்தார்.

இதில் இருந்து இரண்டு மாதங்கள் கழிவதற்கு முன்னர் 1986 பெப்ரவரி 8 ம் திகதி தொழிலாளர் புரட்சிக் கட்சியினுல் கூட்டப்பட்ட 8 வது காங்கிரசில் நுழையாமல் உடல் ரீதியில் பொலிசாரால் தடுக்கப்பட்டவர்களுள் தோழர் கீர்த்தியும் ஒருவர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கு ஆதரவான தொழிலாளர் புரட்சிக் கட்சி அங்கத்தினர்களையும், அனைத்துலகத் தோழர்களையும் அப்புறப்படுத்தும் பொருட்டே பொலிசார் சுலோற்றரினுலும் அவரது கையாட்களாலும் அழைக்கப்பட்டனர். அதே நாளில் இந்த புரட்சிகர அனைத்துலகவாதிகள் மற்றுமோர் இடத்தில் கூடி பிரித்தானிய பகுதியை மீள அங்குரார்ப்பணம் செய்வது பற்றி திட்டமிட்டனர். அவர்களின் இக்கூட்டத்துக்கு தோழர். கீர்த்தி நல்வாழ்த்துச் செய்திகளை வழங்கினுர்.

நன்கு பிரசித்தமான இந்த வரலாற்று வெளிச்சத்திலும் தொழிலாளர் புரட்சிக் கட்சி ஓடுகாலிகளுக்கு எதிரான தோழர் கீர்த்தியின் ஈவிரக்கமற்ற யுத்தத்தினை முற்றிலும் காட்டும் ஆவணப்படுத்தப்பட்ட பத்திரங்களின் வெளிச்சத்திலும் பார்க்கையில் சுலோற்றர்வாதிகளின் வெளியீடான 'வேர்க்கஸ் பிரசின்' 1988 ஜனவரி 16 ம் திகதி முன்பக்க மரணச் செய்தியை வாசிக்கும் எவரும் உண்மையில் வினேதம் அடைவர்: வெட்கக்கேடான விதத்தில் அது கூறியதாவது!

''அமெரிக்க வேர்க்கஸ் லீக் செயலாளர் டேவிட் நோர்த்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட பிளவு தோழர் பாலசூரியவுடன் நாம் செய்திருக்கக் கூடிய கலந்துரையாடல்களையும், நான்காம் அகிலத்தை மீள கட்டி எழுப்ப அவர் செய்திருக்கக் கூடிய பங்களிப்புக்களையும் நிறுத்தி விட்டமை எமக்கு பெரும் கவலை அளிக்கின்றது. எமது சமீபகால வேறுபாடுகளுக்கு இடையேயும் நாம் எமது அனுதாபங்களை கீர்த்தியின் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் பு. க. க. வின் தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.''

இன்றும் கூட சுலோற்றரதும் அவரின் சகாக்களதும் வெட்கக்கேடான பொய்கள், வரலாற்று சான்றுகளை திரிப்புக்களை கண்டு ஒருவர் ஆச்சரியம் அடையலாம். இந்த மாதிரியான பொய் திரிப்புக்கள் ட்ரொட்ஸ்கி விளக்கிக் காட்டியது போல் ஒரு அரசியல் அடிப்படையில் மட்டுமே சாத்தியமாகும். அதில் சமூக பிற்போக்கின் நலன்கள் அதன் கருவியாக உள்ளவர்களை பொய்மைப் படுத்தலை இராட்சத ரீதியில் பிரயோகிக்கும் வண்ணம் கட்டாயப் படுத்துகின்றது.

1985 அக்டோபர் முதல் 1986 பெப்ரவரி வரையிலான சம்பவங்களை கண்ட தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஒவ்வொரு அங்கத்தவரும் 'வேர்க்கஸ் பிரசில்' வெளியான அறிக்கை ஒரு பொய் என்பதை அறிவர். ஆனுல் அவர்கள் சுலோற்றரின் அந்த அறிக்கைக்கு எதிர்ப்புக் காட்டமாட்டார்கள். அவர்களைப் பொறுத்த மட்டில் இது நான்காம் அகிலத்துக்கு எதிரான மற்றுமோர் அவசியமான தாக்குதல் ஆகும். தோழர். கீர்த்தி உயிர் வாழ்ந்த காலத்தில் அவரை வெறுத்தும், அவர் தலைமை தாங்கிய அமைப்பை உடல் ரீதியில் நாசமாக்கப் பல்லாண்டுகள் செயற்பட்டும் வந்த தொழிலாளர் புரட்சிக் கட்சி, அவரின் மரணத்தை தனது அரசியலின் பிற்போக்கு தேவைகளுக்குப் பயன்படுத்த பச்சாதாபப்படப் போவதில்லை.

தமது வாழ்க்கையின் இறுதி இரண்டு ஆண்டுகளில் தோழர் கீர்த்தி தமது முழுச் சக்தியையும் நான்காம் அகிலத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், பாரம்பரியங்களையும் காக்க அர்ப்பணித்தார். ஆதலால் டேவிட் நோர்த்தின் ஏற்பாடில்லாது போகின் அவர் புரட்சிகர தொழிலாள வர்க்க இயக்கத்தை அழிக்கும் சுலோற்றர் போன்ற தொழிலாள வர்க்க எதிரிகளுடன் கூட்டுச் சேர்ந்திருப்பார் என்ற 'வேர்க்கஸ் பிரசின்' வாதத்தின் மூலம் கீர்த்தியின் நினைவும் புரட்சிகர கௌரவமும் கரி பூசப்படுவதை எம்மால் அனுமதிக்க முடியாது. எனவே 1985 — 86 பிளவைப் பற்றிய முக்கிய உண்மைகளை நினைவு கூர்வது உசிதமானது.

தொழிலாளர் புரட்சிக் கட்சியின் கேவலமான 8 வது காங்கிரஸ் இடம் பெற்ற சமயத்தில் 'வேர்க்கஸ் பிரஸ்' பண்டாவின் 'ஏன் அனைத்துலகக் குழுவை குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்பதற்கான 27 காரணங்களை' பிரசுரித்தது. அதில் அவர் கூறியதாவது ''நான்காம் அகிலத்தை கட்டி எழுப்புவதற்கான — அவசியமான ஓர் முன் நிபந்தனையாக அனைத்துலகக் குழுவை புதைக்க வேண்டும். மேலும் ஒரு நாள் அதனை உயிர் நீடிக்க அனுமதிப்பதானது ட்ரொட்ஸ்கியையும் ட்ரொட்ஸ்கிசத்தையும் படுமோசமான முறையில் காட்டிக் கொடுப்பதற்குச் சமமாகும்.''

இந்தப் பிரகடனம் சுலோற்றரின் உற்சாகமான ஆதரவைப் பெற்றது. சில தினங்களின் பின்னர் அவர் எழுதியதாவது:

''மைக் தொடர்ச்சியான, மத்தியமாக்கப்பட்ட அதிகாரம் என்ற நோர்த்தின் போலியான வாதத்துக்கு ஒரு அடி கொடுத்துள்ளார் என நான் கூறுவேன்.''

பிளவுக்கு ஒரு மாதத்தின் பின்னர், தொழிலாளர் புரட்சிக் கட்சி ஒரு பிரேரணையை நிறைவேற்றியது. அது கூறியதாவது: ''நா. அ. அ. குழுவின் பாரம்பரியங்களை கம்யூனிச விரோதம் என இது நிராகரிப்பதோடு சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சி என்ற அதன் கூற்றுக்கு யதார்த்தத்தில் எந்த விதமான அடிப்படையும் கிடையாது எனக் கொள்கின்றது.''

இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டு சில வாரங்களின் பின்னர், இந்த பிரேரணையின் கர்த்தாக்களான மைக்கேல் பண்டாவும், டேவிட் குட்டும் — அனைத்துலகக் குழுவில் இருந்து பிரிவதற்கான ஏற்பாடுகளைச் செய்த கிளிப் சுலோற்றரின் நெருங்கிய சகாக்கள் — தொ. பு. கட்சியில் இருந்து இராஜினுமாச் செய்ததோடு தாம் ஸ்டாலினிசத்தினதும் சோவியத் அதிகாரத்துவத்தினதும் அப்பட்டமான ஆதரவாளர்கள் என பிரகடனம் செய்தனர்.

இந்தப் பரிணுமம், அனைத்துலகக் குழுவிற்கு எதிரான பண்டா, சுலோற்றரின் தாக்குதல் உலக ஏகாதிபத்தியத்தின் படுபிற்போக்கு அரசியல் ஏஜன்சிகளால் ஒழுங்கு செய்யப்பட்டது என அனைத்துலகக் குழு விடுத்த எச்சரிக்கையை ருசுப்படுத்தியது.

இவை எல்லாவற்றுக்கிடையேயும், தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ட்ரொட்ஸ்கிசக் காட்டிக் கொடுப்புக்கு எதிரான போராட்டத்தை கீர்த்தி உண்மையில் எதிர்த்ததாகக் கூறும் சுலோற்றரின் வாதத்தை ஆய்வு செய்ய நாம் பிளவு பற்றியும் பண்டா, சுலோற்றரின் அரசியல் பற்றியும் தோழர். கீர்த்தியின் கட்டுரைகளை நோக்குவோம். 1986 மார்ச் 5 ம் திகதி அவர் ஓர் கட்டுரை வரைந்தார். பண்டாவை அம்பலப்படுத்தி அ கட்டுரை எழுதிய சமயம் பண்டா இலங்கையில் இருந்ததோடு இன்னமும் தொ. பு, கட்சியின் செயலாளராகவும் விளங்கினுர் கொல்வின் ஆர் டி. சில்வாவுடனும் சமசமாஜக் கட்சியின் ஏனைய அங்கத்தவர்களுடனும் சிநேகபூர்வமான கலந்துரையாடல்களை நடாத்தினுர். அத்தோடு சமசமாஜக் கட்சியில் மீண்டும் சேர்ந்து கொள்ளும்படி ஹெக்டர் அபேவர்தன அவருக்கு அழைப்பும் விடுத்தார்.

பழைய லங்கா சமசமாஜக் கட்சியின் பிரபல்யம் மிக்க குலைப்பு வாதியும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இந்திய போல்ஷிவிக லெனினிசக் கட்சியை (இந்தியாவில் அன்றைய நான்காம் அகிலக் கிளை) ஜெயப்பிரகாஷ் நாராயணனின் பிரஜா சோசலிஸ்ட் கட்சியுள் குலைத்து விட பொறுப்பாய் இருந்தவரும், சமசமாஜக் கட்சி இழைத்த பெரும் தவறு அது நான்காம் அகிலத்தில் சேர்ந்ததே என பகிரங்கமாகப் பிரகடனம் செய்தவருமான எச். அபேவர்தன இப்போது நான்காம் அகிலத்தின் ஸ்தாபிதம், 1953 ல் இருந்து நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வரலாறு உட்பட்ட வரலாற்றை உதவாக் கரையானவை எனக் குறிப்பிட்ட எம். பண்டாவுடன் ஐக்கியம் பூணுவது முற்றிலும் பொருத்தமானதே.

'இந்த அழைப்பு, சமீபத்தில் பண்டா சமசமாஜக் கட்சி தலைமை காரியாலயத்துக்கு விஜயம் செய்த சமயம் விடுக்கப்பட்டது. மோசமான அரசியல் நெருக்கடியின் உச்சக் கட்டத்தில் தனது சொந்த இயக்கத்தைக் கைவிட்ட பண்டா தற்சமயம் சகல நோய் பிடித்த ட்ரொட்ஸ்கிச விரோத போக்குகளுடனும் இலங்கையில் கூடிக் கழித்து வருகின்றுர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கு எதிராக 'இடைமருவு வேலைத்திட்டத்தின் நலன்காப்போர்' என்ற போலி லேபலின் கீழ் ஓடுகாலிகளைக் கொண்ட ஒரு



இளம் சோசலிஸ்ட்டுகளின் தேசிய

''தொழிலாளர் பாதை''
சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை''' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 4.00 3 மாதம் — ரூ. 12.00
6 மாதம் — ரூ. 24.00 1 வருடம் — ரூ. 48.00

பெயர் :.........................................

முகவரி :.........................................

சந்தாக் காலம் :.................. ரூ: .......... சதம் ......

சந்தாப் பணத்திற்குரிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

நிர்வாகி,

''தொழிலாளர் பாதை''
இல. 90, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீடூழி வாழ்க!

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

மிருகக்காட்சிச்சாலையை கூட்டும் நம்பிக்கையில் தொழிற்பட்டு வருகின்றார்.

''சமசமாஜக் கட்சியின் அழைப்பின் பேரிலான பண்டாவின் அக்கறை எங்ஙனம் என்று கூறின் இலங்கை கடவச் சீட்டு இல்லாமை இதற்குக் குறுக்கே நின்று கொண்டு உள்ளதாகக் கூறியுள்ளார். எவ்வாறு எனினும் சமசமாஜக் கட்சி தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வாவைச் சந்தித்து கலந்துரையாடலைத் தொடர உடன்பட்டுள்ளார்.

''1953 ல் இருந்து தாம் எதிர்த்து போராடி வந்த தொழிலாள வர்க்க எதிரிகளுடனான பண்டாவின் முன்னேற்பாட்டின் பேரிலான இச்சந்திப்பு அவரை தொழிலாள வர்க்க இயக்கத்தின் வரலாற்றில் கண்டு கொள்ள முடியாத ஒரு குணப்படுத்த முடியாத போதகராக்கியுள்



ரின் தேசிய மாநாட்டில் கீர்த்தி

ளது.''

கீர்த்தி தமது கட்டுரையை பின்வரும் நோக்குடன் முடித்து வைத்தார்: சுயமரியாதை உள்ள எந்தவொரு புரட்சிகர இயக்கமும் பண்டாவின் வெறுத்து ஒதுக்கத்தக்க டவடிக்கைகள் அவரை தமது அணியில் இருந்து தூக்கி வீசுவதற்கு போதுமான சான்றுகளாக கொள்ளும்.

''பண்டாவின் அரசியல் சகாக்களான சீ. சுலே ற்றர் டீ. புருஷ் அன்ட் கம்பனி என்ன நிலைப்பாட்டை இன்று வகிக்கப் போகின்றது என்பதை நாம் ஆவலுடன் எதிர்பார்த்து உள்ளோம்.''

உண்மையில் இந்த அரசியல் சகாக்கள் பண்டாவுக்கும் சமசமாஜக் கட்சிக்கும் இடையேயான சந்திப்பை பற்றி எதுவும் கூறவேயில்லை அத்தோடு மாஜி — பொதுச் செயலாளர் ஒரு பகிரங்க ஸ்டாலினிச மேடையில் தோன்றி, ட்ரொட்ஸ்கிசத்தையும் கண்டிக்கும் வரையும் இவர்கள் பண்டா தொழிலாளர் புரட்சிக் கட்சியில் இருந்து இராஜினமாச் செய்ததையும் அவர் ஸ்டாலினிசம் பக்கம் திரும்பி உள்ளதையும் பற்றி வாய் திறக்கவேயில்லை.

பிளவைத் தொடர்ந்து வந்த மாதங்களில் கீர்த்தி தொழிலாளர் புரட்சிக் கட்சி ட்ரொட்ஸ்கிசத்தைக் காட்டிக் கொடுத்த அரசியல் பின்னணியை ஆராயத் தொடங்கினார். அவர் 1971 ம் ஆண்டின் இந்திய — பாகிஸ்தானிய யுத்தத்தின் போது மார்க்சிச அடிப்படைக் கொள்கைகள் முழுமனே காட்டிக் கொடுக்கப்பட்டதை எதிர்த்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடுத்த போராட்டத்தின் பதிவுகளைக் கொண்டதும், ஒரு தசாப்தத்துக்கு மேலாக ஹீலி, பண்டா, சுலோற்றரால் மூடி மறைக்கப்பட்டதுமான பத்திரங்களைச் சமர்ப்பித்தார். இந்தப் பத்திரங்கள் 1970 பதாம் ஆண்டுகளுக்கு முன்னமே சோசலிச லேபர் லீக் தலைமை நிரந்தரப் புரட்சின் அடிப்படையான கோட்பாட்டு, அரசியல் கருத்துக்களை கைவிட்டு விட்டதை நிரூபித்தன.

கீர்த்தி ஏனையவற்றோடு 1971 டிசம்பர் 16 ம் திகதி கிழக்கு பாகிஸ்தான் மீதான இந்திய ஆக்கிரமிப்புக்கு கண்டனத்துடன் கூடிய ஆதரவு வழங்கும் பிரகடனத்தைக் கண்டித்து கிளிவ் சுலோற்றருக்கு எழுதிய ஒரு கடிதத்தையும் சமர்ப்பித்தார். இந்திய முதலாளி வர்க்கத்தை அடிமைத்தனமாக புழும் சோசலிச லேபர் லீக்கின் நடவடிக்கையால் அதிர்ச்சியடைந்த கீர்த்தி பின்வருமாறு எச்சரிக்கை செய்தார்:

''பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் யுத்தம் ஒரு விடுதலை யுத்தம் அன்று. இந்த விடுதலையின் நோக்கம் இந்தியாவுக்கு உள்ளேயே தேசிய, தொழிலாள வர்க்கப் போராட்டங்களை ஒடுக்க நன்கு ஆயத்தம் செய்வதே.

கால் செய்த அடக்கு முறைகளைப் பற்றிக் கூச்சல் போடும் அதே வேளையில் இந்திரா காந்தி, அவசரகால ஆட்சி மூலமும், காஷ்மீரையும் கிழக்கு வங்காளத்தையும் இந்தியாவுடன் இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் மூலமும் இந்திய தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கியுள்ளார்.

''சோசலிச அடிப்படையில் சுயாதீனமான முறையில் இந்தியாவை ஐக்கியப்படுத்தாமலும், இந்திய — பாகிஸ்தானை எதிர்க்காமலும் வங்காளி மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவளிப்பது சாத்தியம் அல்ல. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ளே இருந்து யுத்தத்தை எதிர்க்காமல், இந்திய துணைக் கண்டத்தில் பல தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை பாதுகாக்கக் கூடியதான ஒரு ஐக்கிய சோசலிச இந்தியாவைப் பற்றிப் பேசுவது முற்றிலும் அர்த்தம் அற்றது.''

கிளிப் சுலோற்றர் இன்று அனைத்துலகக் குழுவின் உள்ளே ''சமமான சீரழிவு'' பற்றிப் பேசும் போது அவர் 1971 ம் ஆண்டு இந்திய — பாகிஸ்தானிய யுத்தம் தொடர்பாக சோசலிச லேபர் லீகின் பிற்போக்கு நிலைப்பாட்டுக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் காட்டிய எதிர்ப்பை ஒரு போதும் கணக்கெடுத்ததே இல்லை. அல்லது சுலோற்றர் தாம் பண்டா, ஹீலியுடன் சேர்ந்து கீர்த்தியின் அரசியல் கண்டனங்களுக்காக நான்காம் அகிலத்தினுள் பு க. க. வை தனிமைப் படுத்தி அழிக்க முயன்றதன் மூலம் கீர்த்தியை தண்டிக்க முயன்றதை அங்கீகரிப்பதாயும் இல்லை.

1986 செப்டம்பரில் தோழர். கீர்த்தி, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பான தொழிலாளர் புரட்சிக் கட்சியின் கொலைகாரத்தனமான — இங்கு பாவிக்க வேறு சொல் இல்லை — 'ரெக்கோட்டை' அம்பலப்படுத்தும் ஒரு நீண்ட பத்திரத்தை சமர்ப்பித்தார். இப்பத்திரம் 'நான்காம் அகிலத்தின்' 1987 மார்ச் வெளியீட்டில் (பக்கம் — 51 — 68) மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் புரட்சிக் கட்சித் தலைமை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும், அதன் காரியாளர்களையும் உடல் ரீதியில் அழிக்க எங்ஙனம் செயற்பட்டுள்ளது என்பதைக் காட்டும் கிலசமூட்டும் தகவல்களை இது வெளியிட்டது.

''தமிழ்ப் போராட்டமும், ஹீலி, பண்டா, சுலோற்றரின் துரோகமும்'' என்ற தலைப்பிலான இப்பத்திரம் தொழிலாளர் புரட்சிக் கட்சி தேசிய விடுதலைப் போராட்டத்தினைக் காட்டிக் கொடுத்து வந்த அதே சமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை நிர்மூலமாக்க படுபிற்போக்குச் சக்திகளுடன் எங்ஙனம் கூட்டுச் சேர்ந்தது என்பதை படிப்படியாக காட்டியது.

வரையறுக்கப்பட்ட இடவசதியினுள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிரான தொழிலாளர் புரட்சிக் கட்சியின் கொலைகார சதி நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட உண்மைகளை இங்கு குறித்து வைப்பது முடியாத காரியம். 1972 ல் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை அது நெருக்கியது எங்ஙனம் தமிழ் தேசிய இயக்கம் அனைத்துலக ரீதியில் பிரசித்தி பெற்றதன் பின்னர் மட்டுமே சரியான நிலைப்பாட்டுக்கு திரும்ப இணங்கியது எங்ஙனம் அத்தோடு இந்தப் பேரளவிலான திருத்தத்தின் பின்னரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக தலைமையை சிதறடிக்க தமிழர் விரோத இனவாதிகளுடன் இது செயற்பட்டது எங்ஙனம்.

இந்த கொலைகார அரசியல் வரலாற்றின் மிகப் பயங்கரமான அத்தியாயம் இன்னமும் எழுதப்பட வேண்டியுள்ளது. 1983 கோடைக் காலத்தில் யூ. என். பி. அரசாங்கம் தமிழர் விரோத பயங்கர நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தது. இது இலங்கையின் தலைநகரான கொழும்பில் வசித்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் படுகொலையில் போய் முடிந்தது. இந்த பயங்கரத்தை எதிர்த்து போராடிய ஒரே அரசியல் கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. இந்தக் கலவரங்களுக்கு மத்தியிலும் அது தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையைக் காக்க தொடர்ந்து போராடியது.

தொழிலாளர் புரட்சிக் கட்சி செய்தது என்ன? 1983 ஆகஸ்ட் 10 ம் திகதி 'நியூஸ் லைன்' மைக்கேல் பண்டாவினால் எழுதப்பட்ட ஒரு மொட்டைக் கருத்துரையோடு வெளியாகியது. ''பொலிசும், இராணுவமும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட தன்னிச்சயான அளவு — கடந்த அதிகாரங்களை எமது தோழர்களைக் கொல்லவும், எமது அச்சகத்தை அழிக்கவும் பயன்படுத்தி இருக்கும் சாத்தியம் உண்டு''

இந்த அறிக்கையை ஆய்வு செய்கையில் தோழர். கீர்த்தி சுட்டிக் காட்டியதாவது:

''பரந்த அளவிலான இனவாத கலவரங்களின் வெடிப்புடன் பு. க. க. காரியாளர்கள் உடல் ரீதியில் அழிக்கப்பட்டிருப்பார்கள் என ஊகித்ததன் பின்னரும் தொழிலாளர் புரட்சிக் கட்சி இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகளைக் காக்க சின்னி விரலைத் தன்னும் உயர்த்த வில்லை. ஆட்சேபனை துண்டுக் கடிதம் தன்னிலும் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட விலலை.''

கீர்த்தி கொலை செய்யப்பட்டு, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிர்மூலமாக்கப்பட்டிருக்கும் சாத்தியத்தை தொழிலாளர் புரட்சிக் கட்சி தலைமை அந்தரங்கமாக வரவேற்றார்கள் என்பதை விட வேறு எந்தவொரு முடிவுக்கும் வர முடியாது. இதன் மூலம் ஒரு ட்ரொட்ஸ்கிச இயக்கம் என்ற ரீதியில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவைக் குலைக்கும் அவர்களின் ...னவான திட்டத்துக்குத் தடையாக இருந்த ஒன்று குறைந்திருக்கும்.

எவ்வாறு எனினும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அழிக்கப்பட வில்லை என அவர்கள் கண்டதும் ஹீலி, பண்டா, சுலோற்றர் இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகளை எந்த விதத்திலும் ஒழித்துக் கட்ட முடிவு செய்தனர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பத்தாவது காங்கிரசில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை வெளியேற்றும் அவர்களின் பிரோணையின் அர்த்தம் அதுவே.

நா. அ. அ. குழுவின் செயலாளராக தாம் இருந்த சமயம் இடம் பெற்ற சகல சம்பவங்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என சுலோற்றர் நடிக்கும் சமயத்தில் தோழர் கீர்த்தி தொழிலாளர் புரட்சிக் கட்சியின் முக்கிய சீரழிவுக்கு சுலோற்றர் ஆற்றிய பங்களிப்பைச் சுட்டிக் காட்டினார்.

''அத்தகைய மோசமான காட்டிக் கொடுப்புக்களை அமுல் செய்வதற்கு தொழிலாளர் புரட்சிக் கட்சி வேலைத்திட்டம் பற்றிய ட்ரொட்ஸ்கிச நிலைப்பாட்டையே தாக்க வேண்டி ஏற்பட்டது. 1984 ம் ஆண்டின் கடைப் பகுதியில் ஹீலி, சுலோற்றரின் உதவியோடு, ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் கடைப் பிடிக்கும் எந்தவொரு அமைப்பும் எதிர்ப் புரட்சியின் கருவியாக மாற்றம் செய்யப்பட வேண்டும் என முடிவு செய்தார்.

''இந்நிலைப்பாடு, சுலோற்றரால் எழுதப்பட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பத்தாவது காங்கிரசின் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் வெளி வெளியாக முன் வைக்கப்பட்டது தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சந்தர்ப்பவாதப் போக்குக்கு எதிரான கண்டனத்துக்கு பதில் அளி

★ 6 ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு . . .

[5 ம் பக்கத் தொடர்ச்சி]

க்கும் விதத்தில் சுலோற்றர் குறிப்பிட்டதாவது: ''இன்றைய வரலாற்று நிலைமைக்குள் இயக்கவியல் சடவாத பயிற்சியினை அடிப்படையாகக் கொண்ட ஒரு புரட்சிக் கட்சி ஒரு புறமும் ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்திற்கு பேரளவில் இணங்கிப் போகும் குழுக்கள் மறுபுறமும் என்ற முறையில் கோடுகள் வரையட்பட்டுள்ளதை அனைத்துலகக் குழுவின் உள்ளேயான போராட்டம் தெளிவு படுத்தி உள்ளது. இக்கோடுகள் புரட்சிக்கான தயாரிப்புக்கும் எதிர்ப்புரட்சிக்கு சேவகம் செய்யும் தயாரிப்புக்கும் இடையேயான கோடுகளாகும்.

தோழர்: கீர்த்தி இதை விளக்குகையில் கூறியதாவது: ''தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைமையின் துரோகிகளின் படி அடிப்படை கொள்கைகளுக்கும் வேலைத்திட்டத்துக்குமான போராட்டமானது, இந்த 'பரந்தளவிலான தீவிரவாத மயமாக்கும்' 'புதிய காலப்பகுதியில் தொழிலாள வர்க்கத்தினைப் புரட்சிக் கட்சி பக்கம் வென்றெடுக்க ஒரு நிசத் தடையாகி உள்ளது. (வேலைத்திட்டத்துக்கு எதிரிடையாக) 'புதிய விதிமுறைகளை' கண்டு பிடித்துள்ளவர்கள் மட்டுமே பரந்த புரட்சிக் கட்சிகளை வழி நடத்துவர்.

எனவே ஹீலி, பண்டா, சுலோற்றர் முடிவுரையாகக் குறிப்பிட்டதாவது. — குறைந்தபட்சம் எழுத்தளவில் தன்னிலும் — ஒரு நாளைக்கு 200 அங்கத்தினர்களைத் திரட்டுவதில் தொழிலாளர் புரட்சிக் கட்சியுடன் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போட்டியிட முடியாது போனமைக்குக் காரணம் அது சரியான விதிமுறையை' கைவிட்டமையும், ட்ரொட்ஸ்கிசத்தின் கொள்கை, வேலைத்திட்டங்களை பேணும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நடவடிக்கை அடியோடு உதவாக்கரையானதாக விளங்குவதுமே.

இதற்கு முரணான விதத்தில் கொள்கைகளை பணத்துக்கு விற்று விட்ட ஹீலியும் அவரின் கிரீஸ் சகாவான சவாஸ் மிசைலும் இந்த அப்பட்டமான காட்டிக் கொடுப்புக்களில் இருந்து இலாபம் சம்பாதிக்கின்றனர். இந்தச் 'சரியான விதிமுறைகளை' வைத்துக் கொண்டு முற்றிலும் துரோகம் மிக்க மத்தியவாத சாணக் கும்பல்களைக் கட்டியெழுப்புவதன் மூலமும் தத்தமது நாடுகளில் உள்ள முதலாளித்துவ அமைப்புக்களுடன் தட்மை இணைத்துக் கொள்வதன் மூலமும் இலாபம் சம்பாதிக்கின்றனர்.

''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மீதான இந்த துரோகம் நிறைந்த தாக்குதலுக்கு காரணம், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உள்ளே ட்ரொட்ஸ்கிசத்தைப் பேணுவதானது, அரைக் காலனித்துவ நாடுகளில் உள்ள தேசிய முதலாளி வர்க்கப் பகுதிகளுடன் தாம் கொண்டுள்ள சந்தர்ப்பவாத உறவுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என தொழிலாளர் புரட்சிக் கட்சித் தலைவர்கள் அஞ்சியதே. எவ்வாறெனினும் தொழிலாளர் புரட்சிச் கட்சித் தலைவர்களின் ட்ரொட்ஸ்கிசக் காட்டிக் கொடுப்புக்கு எதிரான பதிலடியில் அமெரிக்க வேர்க்கஸ் லீக்கின் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் ஈடுபட்டதில் இருந்து, அனைத்துலகக் குழுவின் உள்ளே தமது பிற்போக்கு ஆளுமைக்கு எதிரான ஒரு ட்ரொட்ஸ்கிசக் கிளர்ச்சி வளர்ச்சி பெறுவதை தடை செய்யும் பொருட்டு அனைத்துலகக் குழுவின் உள்ளே சகல நிச ட்ரொட்ஸ்கிஸ்டுகளையும் ஒழித்துக் கட்டுவது ஹீலி, பண்டா, சுலோற்றருக்கு முற்றிலும் அவசியமாகியது. எனவே தான் தொழிலாளர் புரட்சிக் சட்சித் தலைவர்கள் பு. க க வுடன் அரசியல் குரோதம் கொண்டிருந்ததோடு. 1983 — 1985 காலப் பகுதியில் அதை அழித்து விடவும் முயன்றனர்.

10 வது காங்கிரசுக்கான தயாரிப்பாக பு. க. க. வினால் எழுதப்பட்ட அரசியல் முன்நோக்குப் பத்திரம் ஹீலி, பண்டா, சுலோற்றரினால் மூடிமறைக்கப்பட்டது. இந்த முக்கியமான பத்திரத்தின் தலைவிதி பற்றி எழுதுகையில் கீர்த்தி குறிப்பிட்டதாவது:

''ஹீலி விலக்கப்பட்ட பின்பும், அவர்களின் ஆதரவாளர்களுடனான பிளவின் பின்னரும் பு. க. க. இந்த மூடி மறைக்கப்பட்ட முன்நோக்குப் பத்திரத்தை மீண்டும் ஒரு தடவை தொ. பு க சி மத்திய குழுவிடம் சமர்ப்பித்தது. ஹீலியினதும் தொழிலாளர் புரட்சிக் கட்சியினதும் கொலைகார காட்டிக் கொடுப்பை அம்பலமாக்கும் போராட்டத்தின் ஒரு பாகமாகவே இது இடம் பெற்றது அச்சமயம் பண்டா — சுலோற்றர் — பிரானி தலைமையிலான இக்கூட்டம் ட்ரொட்ஸ்கிச முன்னோக்கின் மீது கலந்துரையாடல் நடத்தவும் கூட எதிர்ப்புக் காட்டியமை உடன் தெளிவாகியது. அவர்கள் ஹீலியை விட வெட்கக்கேடான முறையில் அதே துரோகத் தாக்குதலை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

''1985 — ஜூலை — அக்டோபரில் தொழிலாளர் புரட்சிக் கட்சியினுள் ஏற்பட்ட அரசியல் வெடிப்பின் பின்னரும் அவர் நான்காம் அகிலத்தைத் தாக்கும் பொருட்டு தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பத்திரிகையை சகல வகையறுக்களைச் சேர்ந்த ட்ரொட்ஸ்கிச விரோதிகளுக்கும் திறந்து விட்டார். ஆனால் ட்ரொட்ஸ்கிச காட்பாடு, முன்நோக்கு பற்றிய கொள்கை சார்ந்த கலந்துரையாடலாக அது மாறியதும் சீ. சுலோற்றரின் ஜனநாயகம் முடிவடைந்தது.

எனவே தான் சுலோற்றர் — பிரானி குழு, ஹீலியின் காட்டிக் கொடுப்பை அம்பலப்படுத்தி 1982 — 84 ல் வேர்க்கஸ் லீக்கினால் சமர்ப்பிக்கப்பட்டவற்றை எங்ஙனம் பிரசுரிக்க மறுத்தனவோ அங்ஙனமே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தால் வழங்கப்பட்ட 'material' களையும் விநியோகிக்க மறுத்தனர். ஒழுக்காற்று அடிப்படையல் சுலோற்றரும் பிரானியும் எம். பண்டாவின் ஆதரவுடன் இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் கூட்டப்பட்ட தொழிலாளர் புரட்சிக் கட்சியின் 8 வது காங்கிரசில் அனைத்துலகக் குழுவின் ஆதரவாளர் கலந்து கொள்வதை தடை செய்ய பொலிசாரை அழைத்தனர்.

''எனவே நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவைக் கண்டனம் செய்ததன் பின்னர் தொழிலாளர் புரட்சிக் கட்சி அங்கத்தினர்களின் ஜனநாயக உரிமையை தாக்க அரச சக்திகளை பயன்படுத்திய சுலோற்றர் — பிரானி குழு, இன்று புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மீதான அரசின் தாக்குதலை மௌனமாக ஆதரிப்பது தற்செயலானதல்ல. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகளை சிதறடிக்க திட்டவட்டமான பிரச்சாரத்தை நடாத்தி வருவதோடு, அவர்கள் பொலிசினதும், அரசினதும் ஒடுக்கு முறைக்கு முகம் கொடுக்கும் போது மௌனம் சாதிக்கும் சுலோற்றர், தாம் ட்ரொட்ஸ்கிச முன்நோக்கின் மீதான கலந்துரையாடலுக்கு ஆதரவளிப்பதாக நடிக்கின்றார்.''

இந்த நீண்ட பத்திரத்தின் இறுதி வசனத்தில் கீர்த்தி. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஒடுகாலிகளைப் பற்றிய தமது மதிப்பீட்டை சுருக்கிக் கூறியதாவது: ஹீலி சுலோற்றரினால் தலைமை தாங்கப்பட்ட தொழிலாளர் புரட்சிக் கட்சி எனப்படுவதைப் பொறுத்த மட்டில், அவை ஏகாதிபத்தியத்தின் இரண்டாந்தர ஏஜன்சிகளன்றி வேறொன்றுமல்ல.''

மேலே மேற்கோள்களாகக் காட்டப்பட்ட பந்திகள் ஓடுகாலி சுலோற்றரைப் பற்றிய கீர்த்தியின் மனப்பாங்கினை எவருக்கும் சந்தேகமறக் காட்டும் கீர்த்தி, தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ட்ரொட்ஸ்கிசக் காட்டிக் கொடுப்புக்கு எதிரான போராட்டத்தின் தலைமையில் தம்மை தற்செயலாக கணக்கிட வில்லை. ஆனால் தொழிலாளர் புரட்சிக் கட்சியுடன் கீர்த்தியை கலந்துரையாடவிடாமல் நோர்த் தடுத்ததாக சுலோற்றர் தெரிந்தும் தெரியாமல் நடிக்கின்றார்: உண்மையில் அனைத்துலகக் குழுவின் மூழு அங்கீகாரத்துடனும் தோழர். கீர்த்தி தொழிலாளர் புரட்சிக் கட்சியுடன் ஒரு பேச்சுவார்த்தையை தொடங்கினார். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சார்பில் அவர் 1987 பெப்ரவரி 10 ம் திகதி தொழிலாளர் புரட்சிக் கட்சிக்கு ஒரு பகிரங்க கடிதத்தினை வரைந்தார்.

1986 கோடைக் காலத்தில் ஜயவர்தன ஆட்சியினால் கைது செய்யப்பட்டு, சிறைக்குள் தள்ளப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களைக் காக்க தொழிலாளர் புரட்சிக் கட்சி தவறியதை சுட்டிக் காட்டிய அவர், ஒடுக்கு முறையினை பற்றிய தகவல்களை கோரும் அவர்களின் கேவலமான மோசடிகளை அம்பலப்படுத்தினார். தொழிலாளர் புரட்சிக் கட்சியின் மாதக் கணக்கிலான மௌனம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அரசின் தாக்குதலுக்கு உள்ளான ஒவ்வொரு தடவையும் ஹீலி, பண்டா, சுலோற்றர் கடைப்பிடித்த எதிர்ப்பு மிக்க அசிரத்தையினது தொடர்ச்சி என கீர்த்தி விளக்கினார்.

பு. க. க. வை உற்சாகத்துடன் பண மறுத்தமை, பற்றி கீர்த்தி எழுதியதாவது: 'உங்கள் தலைமை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் சம்பந்தமாகக் காட்டிய குரோத மனப்பாங்கினையும், பிரித்தானிய தேசியவாதத்துக்கு உங்களின் முழுமையான கீழ்ப்படிவையும் எல்லாவற்றுக்கும் மேலாக வெளிப்படுத்திற்று. தங்களுக்கு உடனடியாக சட இயக்க வெற்றிகளைத் தரும் என நீங்கள் கருதுகின்றவற்றை விட இந்த உலகில் உள்ள வேறெதுவும் தங்களின் கவனத்தை ஈர்க்கவோ அல்லது அக்கறையை தூண்டவோ போவதில்லை.

''மேலும் எமது கட்சி தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை காக்க எடுத்த நிலைப்பாட்டின் காரணமாக தோழர். ஆர். பி. பியதாச படுகொலை செய்யப்பட்டதில் இருந்து உங்கள் தலைமை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை சிதறடிக்கும் பொருட்டு ஒன்றன் பின் ஒன்றாக ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினை சிதறடிப்பதற்கான வெட்கக்கேடான சூழ்ச்சியின் ஒரு பாகமாக விளங்கிற்று. எமது கட்சியை தாக்க ஹீலி பண்டா, சுலோற்றர் தலைமை தர்மவிமல ரணசிங்க தலைமையிலான ஒரு சிங்கள இனவாத கும்பலுடன் மனமொத்து இணைநதது. இது ஒரு அரசியல் உண்மை நீங்கள் ஏன் அங்ஙனம் செய்தீர்கள் என்ற கேள்விக்கு இன்னமும் பதில் அளிக்கவில்லை ''

★ 7 ம் பக்கம் பார்க்கவும்

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் :————————————

முகவரி :————————————

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல. 90, 1 – வது [illegible] ஒழுங்கை,
கொழும்பு — 10.

# தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு . .

[6 ம் பக்கத் தொடர்ச்சி]

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிளவினை ஒழுங்கு செய்கையில் பண்டாவும், சுலோற்றரும் வகித்த பாத்திரத்தினை ஆய்வு செய்த பின், 1985ன் கடைப் பாகத்திலும் 1986 முற்பகுதியிலும் பண்டாவின் இலங்கை விஜயம் 1986 ஜூனில் பு. க. க. வுக்கு எதிரான அரசின் தாக்குதலுக்கான அரசியல் களத்தினை தயார் செய்தது என கீர்த்தி விளக்கினார். இலங்கையில் பண்டாவின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைப் பற்றி விளக்கும் படி பு. க. க. சவால் செய்ததை கீர்த்தி சுலோற்றருக்கும், பிரானிக்கும் நினைவூட்டினார்.

'நீங்கள், பண்டாவின் சூழ்ச்சிகள் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை சிதறடிப்பதில் உங்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையில் பூரண மௌனம் சாதித்தீர்கள். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகள், எம்மை நாசமாக்க நீங்கள் தொடுத்த நச்சுத்தனமான சீர்குலைப்புவாத பிரச்சாரத்திற்கு எதிராக ஈவிரக்கமற்ற பிரச்சாரம் தொடுக்காது இருப்பின் இன்று பேணுவதற்கு ஒரு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இருந்திருக்காது.''

இன்று அவர்கள் குள்ளமான விதத்தில் தோழர். கீர்த்தியுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை தாம் தவற விட்டதையிட்டு சிணுங்குகின்றார்கள். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பகிரங்க கடிதத்துக்கு பதிலளிக்க சுலோற்றர், பிரானி அக்கறைப்பட்டதே கிடையாது.

இதுகாறும் நாம் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகள் தொடர்பான தோழர். கீர்த்தியின் மனப்பாங்கினை பிரசுரிக்கப்பட்ட பத்திரங்களில் இருந்து மேற்கோள் காட்டுவதன் மூலம் விபரித்தோம். எவ்வாறெனினும் அவரின் தனிப்பட்ட கடிதத் தொடர்புகளில் இருந்து ஒரு பகுதியை தருவதன் மூலம் பகிரங்க 'பெக்கோட்டு'க்கு அனுபந்தம் சேர்ப்பது பொருத்தமானது: அவற்றில் தொழிலாளர் புரட்சிக் கட்சி, அதன் தலைவர்கள் பற்றிய அவரின் நேரடியானதும், நெருங்கியதுமான கருத்து வெளிப்பாட்டை எவரும் கண்டு கொள்ளலாம்

1986 ஆகஸ்ட் 29ம் திகதி டேவிட் நோர்த்துக்கு எழுதிய கடிதத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

அனைத்துலகக் குழுவுடனான சுலோற்றர் — பிரானி குழுவின் கோமாளித்தனமான சூழ்ச்சிகளைப் பற்றி நீங்கள் குறிப்பிடுபவற்றுடன் நான் முற்றிலும் இணங்குகின்றேன் ஆம், அவர்களை எம்மில் இருந்து தனிப்படுத்தும் கொள்கை ரீதியானதும், வேலைத் திட்டம் சம்பந்தமானதுமான பிரச்சினைகளை தெளிவு படுத்துவதன் மூலம் பிளவினை ஆழமாக்குவது மிக முக்கியமானது. 'அனைத்துலகக் குழுவை கலைத்து விடு' என்ற பிரேரணையை 'வாபஸ் பெற்ற போதிலும் வேறுபாடுகள் மேலும் மேலும் இணக்கம் காண முடியாதவையாக்கிக் கொண்டுள்ளன என நான் எண்ணுகின்றேன் ஏனெனில், பிளவை உண்டு பண்ணிய வர்க்க சக்திகள் முக்கியத்துவம் கண்டு வருகின்றன. தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை தாக்கிக் கொண்டு தேசிய முதலாளி வர்க்கம், ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகங்களுக்காக தொழிற்பட்டு வரும் முகமூடியணிந்த 'ட்றொட்ஸ்கிஸ்டுகளில்' இருந்து முடிந்த மட்டும் சாத்தியமானவரை ஆழமாக எல்லைக் கோட்டை வரைந்து கொள்வது ட்றொட்ஸ்கிஸ்டுகளுக்கு அவசியமாகியுள்ளது.

''நாம் இன்று காண்பது போல, இதே பிரச்சினையில் பப்லோவாதிகளுக்கு எதிராக போராடிய பிரித்தானியப் பகுதியின் பழைய தலைமை, இன்று பப்லோவாதத்தை தோற்றுவித்த அதே வர்க்க சக்திகளுக்கு அடிபணிந்துள்ளது. 1982 — 85 காலப்பகுதியில் ஹீலி, பண்டா, சுலோற்றர் தொழிலாள வர்க்கம் தேசிய முதலாளி வர்க்கத்தினாலும், தொழிற்சங்க அதிகாரத்துவத்தினாலும் ஆளுமைக்குள்ளாக்கப்படும் அரசியல் வழக்காறுகளை ஏற்றுக் கொண்டனர்.''

கீர்த்தி மேலும் விளக்குகையில் கூறியதாவது: ''சுலோற்றர் — பிரானி கு ட்றொட்ஸ்கிசத்தைக் காட்டிக் கொடுக்கும் இந்த முழுப் போக்கில் இருந்தும் துண்டித்துக் கொள்ளவில்லை அவர்களுக்கு எதிரான போராட்டத்தில் இது முடிந்த மட்டும் சாத்தியமான விதத்தில் உறுதியாக நிலைநாட்டப்பட வேண்டும். பிளவின் வரலாற்றினை நோக்கும் இடத்து சுலோற்றர் பின்பற்றிய பாதையை தேடிக் காண்பது கஷ்டமானதல்ல அத்தோடு தனது ட்றொட்ஸ்கிச விரோத நடவடிக்கைகளை அமுல் செய்ய ஒரு அரசியல் மந்திரியான பிரானியினை அவர் ஏன் வேண்டி நிற்கிறார் என்பதை புரிந்து கொள்வதும் கஷ்டமல்ல.

''1982ல் வேர்க்கஸ் லீக், தொழிலாளர் புரட்சிக் கட்சித் தலைமையின் காட்டிக் கொடுப்புக்கு எதிரான ட்றொட்ஸ்கிசக் கிளர்ச்சியில் குதித்த வேளையில இதை தனிமைப் படுத்தி தாக்க ஹீலியும், பண்டாவும் சுலோற்றரும் ஐக்கியப்பட்டனர். 'பிடி தளரக் கூடாது' என்ற போக்கில் ஹீலிக்கு சுலோற்றர் எழுதிய கடிதங்கள் ஒரு திட்டவட்டமான உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தன. தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களுடனும் பிரித்தானிய தொழிற்சங்க அதிகாரத்துவத்துடனும் அணி திரண்ட இவர்கள் ட்றொட்ஸ்கிச வேலைத்திட்டத்தைக் கைவிட மறுத்த அனைவரையும் ஒழித்துக் கட்ட விரும்பினார்.''

1987 ஜூன் 17ல் நோர்த்துக்கு எழுதிய மற்றுமோர் கடிதத்தில் கீர்த்தி பின்வருமாறு எழுதினார்.

''நிச்சயமாகச் சொன்னால், அனைத்துலகக் குழுவில் இருந்து ஹீலி, பண்டா, சுலோற்றர் ஓடுகாலிகளை வெளியேற்றுமதலும், அவர்களை மார்க்சிசத்தின் எதிரிகளாக அம்பலமாக்க இடம் பெற்று வரும் போராட்டமும் இல்லாதிருப்பின் இன்றைய நிலைமையில் (இந்திய) சோசலிசத் தொழிலாளர் கழகமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் மோசமான ஒரு அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கும், அவர்களின் ட்றொட்ஸ்கிச பாசாங்குகள் சவால் செய்யப்படாதிருப்பின் அந்த லீக்கும் ஆளும் வர்க்கங்களை சாத்தியமான சகல விதங்களிலும் உதவும் பொருட்டு அதிதீவிர வலதுசாரி போக்குக்கள் அனைத்துலகக் குழுவின் பகுதிகளை கைப்பற்றி இருக்கும். சிறப்பாக இந்தியாவிலும், குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் இவ்விரண்டு நாடுகளிலும் புரட்சிகர மார்க்சிஸ்டுகளை முற்றிலும் தனிமைப்படுத்தி இருக்கும்.

''அனைத்துலகக் குழுவின் உள்ளே ஹீலி — பண்டா — சுலோற்றர் கருத்துப்படியான நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு அம்பலமாக்கப்பட்டமை, துணைக் கண்டத்தின் இன்றைய வர்க்கப் போராட்டத்தின் மூர்க்கமான வெடிப்பினை எதிர்ப்பார்ப்பினையும் அத்தோடு தொழிலாள வர்க்கத்தினை 'தேசிய கசாப்புக் கடைக்கு' இழுத்துச் செல்லும் தேசிய முதலாளி வர்க்க ஏஜண்டுகளின் சகல முயற்சிகளுக்கும் எதிராக இவ்விரு நாடுகளினதும் தொழிலாள வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினரை தத்துவார்த்த, அரசியல் ரீதியில ஆயுதபாணியாக்கியது.''

அவசியம் காரணமாக நாம் தோழர். கீர்த்தியின் எழுத்துக்களில் இருந்து நீண்ட மேற்கோள்களைக் காட்டி உள்ளோம். ஏனெனில் அவர்களின் சாட் க் கொடுப்புக்கு எதிரான அவரின் போராட்ட அர்ப்பணிப்பை இந்த ஓடுகாலிகள் பிரச்சினைக்குள்ளாக்க முயன்றனர். அது அவரின் நினைவுக்கு எதிரான மோசமான குற்றமாகும்.

தோழர். கீர்த்தியின் மேதாவிலாசத்தினதும் அவரின் பெருந்தன்மையினதும் சாராம்சம் வரலாற்று, வேலைத் திட்ட, அடிப்படைக் கொள்கைகள் பற்றிய பிரச்சினைகள் தொடர்பாகக் காட்டிய சமரசம் அற்ற போக்கேயாகும் அவர் மத்தியவாதத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் எதிரான போராட்டத்தின் தீர்க்கமான வரலாற்று முக்கியத்துவத்தை வேறெவரையும் விட நன்கு ஆழமாக புரிந்து கொண்டிருந்தார்.

உலகச் சோசலிசப் புரட்சியின் வெற்றியும் ஆதலால் மனித இனத்தின் உயிர் வாழ்வும் ட்றொட்ஸ்கிச இயக்கம் இதற்கு ஈவிரக்கமின்றி போராடுவதாலேயே தங்கியுள்ளது.

சந்தர்ப்பவாதத்தை விட தொழிலாள வர்க்கத்துக்கு தீங்கான வேறு நோய் கிடையாது என்பதை அவர் விளங்கிக் கொண்டார். அது குறுங்கால நலன்களை அடையும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தின் நீண்டகால வரலாற்று நலன்களை இடைவிடாது தியாகம் செய்கின்றது. அத்தோடு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வர்க்க நனவினை அபிவிருத்தி செய்வது தொடர்பாக சிடுமூஞ்சித்தனமான அலட்சியம் காட்டுகின்றது. சந்தர்ப்பவாதிகளால் தேடப்பட்ட வெற்றிகள், முன்னேற்றங்கள் எனப்பட்டவை உண்மையில் மூலதனத்தின் நலன்களுக்கு தொழிலாள வர்க்கத்தை அடிமைப்படுத்த திரிபுவாதிகளும், மத்தியவாதிகளும் கையாண்ட வழிகளே அன்றி வேறொன்றும் அல்ல எனவும் அவை முதலாளி வர்க்கத்துக்கு எதிரான புரட்சிகரப் போராட்டத்தை நாசமாக்கின என்பதையும் கீர்த்தி நன்கு அறிந்து கொண்டிருந்தார்.

1987 அக்டோபர் 19ம் திகதி கீர்த்தி நோர்த்துக்கு வரைந்த ஒரு கடிதத்தில் தொழிலாளர் புரட்சிக் கட்சி கடைப்பிடித்த சந்தர்ப்பவாதத்தைப் பற்றி தமது நிலைப்பாட்டை தெளிவாக விளக்கினார். அனைத்துலகக் குழு ஹீலி, பண்டா, சுலோற்றாரின் திரிபுவாத ஆளுமைக்கு உட்பட்ட காலப்பகுதியில் எமது கட்சிகளின் தத்துவார்த்த அத்திவாரமும் அரசியல் வேலைத்திட்டமும் தாக்கப்பட்டதோடு இந்தத் தாக்குதல்கள் கட்சி அமைப்பு, கட்சி பத்திரிகை தொடர்பாக சந்தர்ப்பவாத கருத்துப்பாட்டினை முறைமுறையாக அமுல் செய்வதுடன் கைகோர்த்தபடி இடம் பெற்றன: கட்சிகள் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே கொள்கைக்கும் வேலைத்திட்டத்துக்கும் அவை பிரதிநிதித்துவம் செய்த வர்க்க நனவின் நிச அபிவிருத்திக்குமான போராட்டத்தின் நிலையில் இருந்து ஒரு போதும் மதிப்பிடப்பட்டதில்லை. மாறாக அவை பல் வேறுபட்ட ஜிமிக்குகள்' வெளித்தோற்றங்கள் மூலம் மதிப்பிடப்பட்டன. இதனால் பகுதிகளின் தனிமையை மதிப்பீடு செய்யும் தினசரிப் பத்திரிகைகள், அளவு கோல்களாக நல்ல வங்கிக் கணக்குகள், ஊர்திகள், பகட்டுக் காட்சிகள் மாறின.

''இந்தப் பிரச்சினைகளில் ஹீலியின் திரிப்புக்கள் எமது சொந்த அமைப்புக்களில் தாக்கங்களை ஏற்படுத்தியதோடு, அங்கத்தவர்கள் அரசியல் போக்கின் செல்லுப்படியான தன்மையை அவற்றின் உடனடிப் பலன்களைக் கொண்டு மதிப்பீடு செய்ய ஊக்குவிக்கப்பட்டனர்: இந்தச் சந்தர்ப்பவாத அடிப்படையில் ஒருவர் நிகழ்காலத்தை மட்டும் பயன்படுத்திக் கொள்ள முடியுமே அன்றி எதிர்காலத்துக்கும் ஒரு போதும் தயார் செய்ய முடியாது. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் அவமானம் மிக்க சரிவு, ஹீலியின் 'அமைப்பு கருத்துப்பாட்டின் முற்றிலும் பிற்போக்கான தன்மையை நடைமுறையில் வெளிக்காட்டின.''

தொழிலாளர் புரட்சிக் கட்சி ஓடுகாலிகளுக்கு எதிரான போராட்டத்தில் அனைத்துலகக் குழு ஈட்டிக் கொண்டு அரசியல் தெளிவுகள் பிளவின் பின்னர் பிரசுரமான 'நான்காம் அகிலத்தின்' 6 வெளியீடுகளில் எண்ணற்ற பத்திரங்கள் வடிவில் பிரசுரமாகி உள்ளன. அவை தோழர். கீர்த்தி ஒரு மார்க்சிசத் தலைவர்' என்ற ரீதியில் அவரின் தேட்டங்களின் உச்சக் கட்டத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. அனைத்துலக வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்திக்கான இப்பணிகளின் தாக்கங்கள் கடந்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கையின் மூலம்

■ 8 ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட — கிழ் மாகாணங்களில்

★ 2 ம் பக்கம் பார்க்கவும்

யுத்தக் கப்பல் பீரங்கி தாக்குதல்களை நடாத்தியுள்ளது இந்த பீரங்கி தாக்குதல்கள் இடைவிடாது நடைபெற்றன.

இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையேயான மோதுதல்களில் அநேக இந்தியப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் மட்டக்களப்பில் கந்தல்காடு உப்பாறு பகுதியில் இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதுதலில் 1 விடுதலைப் புலி உறுப்பினரும் 1 இந்தியப் படையாளும் கொல்லப்பட்டனர். மே 12 ம் திகதி திருமலை — அனுராதபுரம் வீதியில் உள்ள வெலிவேரிக் குளம் பகுதியில் இடம்பெற்ற நிலக் கண்ணி வெடிப்பினுல் 6 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். வன்னிப் பகுதி மோதுதலில் ஒரு இந்தியப் படையாள் கொல்லப்பட்டும் புல்மோட்டை தாக்குதலில் இரண்டு இந்தியப் படையினர் காயம் அடைந்தனர். உரும்பிராயில் இடம் பெற்ற சிலிண்டர் வெடி குண்டில் அகப்பட்ட ஒரு இந்தியப் படையாள் கொலையுண்டதோடு பெறும் பலர் காயமடைந்தனர்.

புளொட் இயக்கத்தின் வவுனியா அலுவலகம் மே 6 ம் திகதி இந்தியப் படைகளால் அழிக்கப்பட்டதோடு அதன் 15 அங்கத்தினர் கைது செய்யப்பட்டனர். தமக்கு எதிராக இந்தியப் படைகள் மேற் கொண்டுள்ள தாக்குதல்களையும் அங்கத்தினர்களை கைது செய்வதையும் நிறுத்தும் படி கோரி புளொட் இயக்கம் கடந்த 13 ம் — 14 ம் திகதிகளில் ஹர்த்தால் நடாத்தியது.

தமிழ் தேசிய இனத்தின் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, பேரழிவு மிக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இந்த இராணுவத்தைப் பராமரிக்கும் பொருட்டு (ஒரு நாளுக்கு 10 கோடி (இந்திய) ரூபாய்) ஒதுக்கிய நிதிக்கு மேலதிகமாக 80 கோடி ரூபாய்களைச் செலவிட்டுள்ளது.

இந்திய — இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளர்கள் வட — கிழ் மாகாணங்களில் கட்டவிழ்த்து விட்டுள்ள இரத்தம் தோய்ந்த மிலேச்ச யுத்தத்துக்கு இலங்கை — சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. — நவசமசமாஜ மத்தியவாத தலைமைகள் அனைத்தினதும் பூரண ஆதரவு கிடைத்துள்ளது. இந்திய ஆளும் வர்க்கத்தின் ஒடுக்கு முறையின் பொருட்டு அந்நாட்டு ஸ்டாலினிஸ்டுகளின் ஒத்துழைப்பும் அவர்களுக்கு கிடைத்து வருகின்றது.

இந்தப் படுகொலைகளை நடாத்தி வரும் வேளையில் இந்திய அரசாங்கம் தமது உளவுச் சேவை அதிகாரிகளைக் கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் சென்னையில் பேச்சுவார்த்தையும் நடாத்தி வருகின்றது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை அடியோடு துடைத்துக் கட்டும் அடிப்படையில் இடம்பெறும் இப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் இடைக்கால நிர்வாகத்துக்கு அதிக அதிகாரம், குடியேற்றத் திட்டங்களை அகற்றல் ஆகிய கோரிக்கைகளை உடன் இந்திய ஆட்சியாளர்களுடன் பேரம்பேசி வருகின்றனர்.

## தோழர். கீர்த்தி பாலசூரியவின் . . .

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்பாடாகின. இதன் வரைவில் தோழர். கீர்த்தி நேரடியாகப் பங்கு கொண்டார். அது இந்த வெளியீட்டில் ''இலங்கையின் நிலைமையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்' என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ளது

அவரின் மரணத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அனைத்துலகக் குழுவின் ஐந்தாவது தொடர் கூட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட இப்பத்திரம், இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் தாக்கங்கள் பற்றிய ஒரு விஞ்ஞான ரீதியான ஆய்வினை வழங்குகின்றது. அத்தோடு இந்தியத் துணைக்கண்ட பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு புரட்சிகர முன்னோக்கினையும் முன்வைக்கின்றது. இப்பத்திரம் 1985 ல் இருந்து ஹீலி பண்டா, சுலோட்டரின் ட்ரொட்ஸ்கிச திரிப்புக்களை தரண்டி இங்ஙனம் அனைத்துலகக் குழு பயணம் செய்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இந்தத் தேட்டத்துக்கு அனைத்துலகக் குழு தோழர். கீர்த்திக்கு பெருமளவில் கடமைப்பட்டுள்ளது.

அவர் மரணமான நாளன்று தோழர். கீர்த்தி அனைத்துலகக் குழுவின் பணிகளில் ஈடுபட்டிருந்தார். ஒரு பத்திரத்தை வரைவதற்கான குறிப்புக்கள் பற்றிய வேலையில் அவர் பல மணித்தியாலங்களை ஒதுக்கி இருந்தார். தமது எழுத்து மேசையில் பேனையும் கையுமாக இருந்த வேளையில் முன் எச்சரிக்கையின்றி உண்டான மார்படைப்பினுல் கீர்த்தி ஒரு சில நிமிடங்களில் மரணமானுர்.

பின்னர் அந்த பூர்த்தி செய்யப்படாத எழுத்துப் படிவங்களை அவரின் மேசையில் அவரின் தாழர்கள் கண்டெடுத்தனர். அவரின் இறுதி வார்த்தைகள் வருமாறு

''ஒடுக்காலிகளுக்கு எதிரான போராட்டத்தின் இரண்டாவது ஆண்டினை நாம் பூர்த்தி செய்கையில், பிளவின் வரலாற்றுத் தன்மை நன்கு தெளிவாகி விட்டது. ஒரு விதத்தில் இன்றைய பிளவு...

மரணம் கீர்த்தியை இந்த இறுதி வசனத்தை பூர்த்தி செயய விடாது தடுத்துவிட்டது. ஆனுல் தமது நனவான வாழ்க்கை பூராவையும் தோழர். கீர்த்தி அர்ப்பணம் செய்தவற்றை முடிவுக்கு இட்டுச் செல்லும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் போராட்டத்தினை அதனுல் தடுத்து விட முடியாது.

## ஹொலிவூட் தோட்ட தொழிலாளர்கள் போராட்டம்

தலவாக்கெலை ஹொலிவூட் தோட்டத்தின் தொழிலாளர்கள் கடந்த 4 ம் திகதி உடனடி வேலை நிறுத்தத்தில் குதித்தனர். சகல தொழிற் சங்கங்களினதும் தொழிலாளர்கள் இப்போராட்டத்தில் பங்கு பற்றினர்.

தோட்டத்தில் உப அதிகாரி ஒரு தொழிற்சங்க தலைவருக்கு எதிராக தாக்க முயன்றதை முன்னிட்டு இப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இவ்வதிகாரி இரு இளம் தொழிலாளர்களை சாப்பாடடுக்குச் செல்ல விடாமல் வேலை வாங்கிய சம்பவம் பற்றி புகார் செய்ய சென்ற தலைவரைத் தாக்கி அவரை விரட்ட இவ்வதிகாரி முன் வந்தாரம் இச்சம்பவத்தை அறிந்த தொழிலாளர்கள் உடனடியாக வேலை நிறுத்தி அதிகாரிக்கி எதிராக நடவடிக்கை எடுக்கும் படி கோரினர் அல்லாவிடில் போராட்டம் மற்றைய பகுதிகளுக்கும் எடுத்து செல்லப்படும் எனக் கூறினர்.

தொழிலாளர்களின் இந்த நிலைப்பாடு முன்னில் நிர்வாகம் சமாதானத்துக்கு முன் வந்ததும் போராட்டம் நிருத்தப்பட்டதி.

தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு எதிராக இம் முறையான ஆத்திர மூட்டல்கள் சம்பந்தமாக தொழிலாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். தொண்டமான் தலைமை யூ. என். பி அரசுடன் கூட்டுச் சேர்ந்து இயங்கலை பயன்படுத்தியே தோட்ட நிர்வாகம் இம் முறையான தாக்குதல்களுக்கு முன்னெடுகின்றது. தொண்டமான் அரசுடன் நடத்தும் சமசரத்தை தகர்க்க தொழிலாளர் முன்வர வேண்டும் தன்னை பாதுகாப்பதற்கு ஒரே வழி அதுவே.

## 'கம்கறு மாவத்த' . . .

★ முன் பக்கத் தொடர்ச்சி

அனைத்துலகக் குழு, மேற்கூறிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தயாரானது.

இலங்கையின் தீவிரமாகும் அரசியல் அபிவிருத்திக்குள் ஸ்டாலினிச சமசமாஜ துரோகிகள் மட்டுமல்ல, மாற்றுத் தலைமையை கட்டி எழுப்புவதாக கூறிக் கொள்ளும் மத்தியவாதிகளும் அம்பலமாக்கப்பட்டு உள்ளனர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணிதிரட்ட போராடுகின்றது;

நாம் தொடுத்த நிதி உதவிக்கு இதுவரை நிதி வழங்கி அரசியல் போராட்டத்திற்கு ஒளியூட்டிய சகல தோழர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் நிதியின் எஞ்சிய தொகையாக உள்ள 92,184 ஐ திரட்டி கொள்ள எமக்கு உதவுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சகல அங்க தவர்களிடமும் — 'தொழிலாளர் பாதை' — 'கம்கறு மாவத்த' வாசகர்களிடமும் தொழிலாள வர்க்க — ஒடுக்கப்பட்ட போராளிகளிடமும் நாம் வேண்டுகின்றோம். அது எமது மற்றய உறுதியுரையான தோழர். லியொன் ட்ரொட்ஸ்கி, தோழர். கீர்த்தி பாலசூரியவின் படைப்புக்களை பிரசுரிக்கவும் ஏனைய பிரசுரங்களை பிரசுரிக்கவும் எமக்கு உறுதுணையாயமையும்.

## வெளிவந்து விட்டது . . .

இலங்கை — இந்திய ஒப்பந்தமும்
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்
(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்
அறிக்கை 1987 — நவம்பர் — 19)

விலை ரூ. 2/=

தொடர்பு கொள்க.

ஆனந்த வக்கும்புற
இல. 90, 1 ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினுல் பஹரகம நாகஹவத்தை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org